மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.10/2025
இ.ம.எண்.05/2024
அ.வ.எண்.196/2024

1. பாலன்
2. பெருமாள்
3. முனுசாமி
4. கோவிந்தராஜ்
5. சேகர்
For themselves and on behalf of the public of
Anna Nagar, Kaveri Cross, Navapatti Village,
Mettur Taluk, Salem District. ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாதேஸ்
2. பெருமாள்
3. மாவட்ட ஆட்சியர், சேலம்.
4. சார் ஆட்சியர், மேட்டூர்.
5. வட்டாட்சியர், மேட்டூர்.
6. வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம பஞ்சாயத்து, கொளத்தூர்.
7. தலைவர், நவப்பட்டி கிராம பஞ்சாயத்து.
... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 10.01.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இருந்து வந்த இம்மனுவில் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறை விதிகள், விதி 28(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் இ.ம.எண்.05/2024 என்ற மனுவில் 27.01.2025ம் தேதியன்று போடப்பட்டுள்ள

வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, பிரதிவாதிகளின் பதிலுரைக்காகவும், மேலும் இ.ம.எண்கள்.04/2024, 05/2024, 06/2024 என்ற மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு, அதில் எதிருரைக்காகவும் கடந்த 27.01.2025ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவா "B" அட்டவணை சொத்திலுள்ள பஞ்சாயத்து பொதுப்பாதையில் அவர்களது வாகனங்களை நிறுத்தியுள்ளதால் மனுதாரர்களும், பொதுமக்களும் மேற்படி பொதுப்பாதை வழியாக அவர்களது வீட்டிற்கு செல்ல இயலவில்லை. மேலும் மேட்டுர் வட்டம், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பழுதடைந்த நீர்தொட்டியை அகற்ற கடந்த 05.01.2025ம் தேதியில் JCB இயந்திரத்தின் மூலம் அகற்றும் பணியை 1, 2 எதிர்மனுதாரர்கள் தடுத்தனர். மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் பலவகைகளில் பொதுப்பாதையில் இடையூறு செய்து வருகின்றனர். எனவே இ.ம.எண்.05/2024 என்ற மனுவில் 27.01.2025ம் தேதியன்று போடப்பட்டுள்ள வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய். சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் 2 சென்ட் நிலத்தை பட்டா பெற்று, அதன் சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மனுதாரர்கள் அரசு அதிகாரிகளை தூண்டிவிட்டு எந்த வித மனுதாரர் அரசு அதிகாரிகளைத் தூண்டிவிட்டு, 1/2 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து, அசல் பட்டாவில் 1/2 சென்ட் குறைத்து, 2ம் எதிர்மனுதாரரின்

பெயரை கூட்டுப் பட்டாவாக சேர்க்கும் வகையில் 1–1/2 சென்ட்டுக்கு பட்டாவை உருவாக்கினார். அதனால் எதிர்மனுதாரர் அ.வ.எண்.20/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து, அவ்வழக்கு முழுவிசாரணைக்கு பின்னிட்டு தீர்ப்பானது. அ.வ.எண்.20/2021ன் தீர்ப்பாணையை ரத்து செய்ய கோர மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. எனவே இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

(ii) மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவா "B" அட்டவணை சொத்திலுள்ள பஞ்சாயத்து பொதுப்பாதையில் அவர்களது வாகனங்களை நிறுத்தினர் என்பதும், அதனால் மனுதாரர்களும், பொதுமக்களும் மேற்படி பொதுப்பாதை வழியாக அவர்களது வீட்டிற்கு செல்ல இயலவில்லை என்பதும், மேலும் மேட்டுர் வட்டம், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பழுதடைந்த நீர்தொட்டியை அகற்ற கடந்த 05.01.2025ம் தேதியில் JCB இயந்திரத்தின் மூலம் அகற்றும் பணியை 1, 2 எதிர்மனுதாரர்கள் தடுத்தனர் என்பதும் பொய்யாகும். நீர்தொட்டி எதுவும் பழுதடையவில்லை. மேற்படி நீர்தொட்டியை 1ம் மனுதாரரின் வீடு அமைந்துள்ள தெருவில் வைக்க முற்பட்டனர். மேலும் மனுதாரர்கள் வேண்டுமென்றே பல்வேறு பிரச்சனைகள் செய்துவருகின்றனர். எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, பிரதிவாதிகளின் பதிலுரைக்காகவும், மேலும் இ.ம.எண்கள்.04/2024, 05/2024,

06/2024 என்ற மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு, அதில் எதிருரைக்காகவும் கடந்த 27.01.2025ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவா "B" அட்டவணை சொத்திலுள்ள பஞ்சாயத்து பொதுப்பாதையில் அவர்களது வாகனங்களை நிறுத்தியுள்ளதால் மனுதாரர்களும், பொதுமக்களும் மேற்படி பொதுப்பாதை வழியாக அவர்களது வீட்டிற்கு செல்ல இயலவில்லை என்றும், மேலும் மேட்டுர் வட்டம், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பழுதடைந்த நீர்தொட்டியை அகற்ற கடந்த 05.01.2025ம் தேதியில் JCB இயந்திரத்தின் மூலம் அகற்றும் பணியை 1, 2 எதிர்மனுதாரர்கள் தடுத்தனர் என்றும், மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் பலவகைகளில் பொதுப்பாதையில் இடையூறு செய்து வருகின்றனர் என்றும், எனவே இ.ம.எண்.05/2024 ற்கு 27.01.2025ம் தேதியன்று போடப்பட்டுள்ள வாய்தா தேதியை இன்றோ அல்லது அருகாமையிலுள்ள தேதிக்கோ முன்கொணர்ந்து உத்தவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் 2 சென்ட் நிலத்தை பட்டா பெற்று, அதன் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்கள் அரசு அதிகாரிகளை தூண்டிவிட்டு எந்த வித மனுதாரர் அரசு அதிகாரிகளைத் தூண்டிவிட்டு, 1/2 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து, அசல் பட்டாவில் 1/2 சென்ட் குறைத்து, 2ம் எதிர்மனுதாரரின் பெயரை கூட்டுப் பட்டாவாக சேர்க்கும் வகையில் 1–1/2 சென்ட்டுக்கு பட்டாவை உருவாக்கினார் என்றும், அதனால் எதிர்மனுதாரர் அ.வ.எண்.20/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து, அவ்வழக்கு முழுவிசாரணைக்கு பின்னிட்டு தீர்ப்பானது. அ.வ.எண்.20/2021ன் தீர்ப்பாணையை ரத்து செய்ய கோர மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், எனவே இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவா "B" அட்டவணை சொத்திலுள்ள பஞ்சாயத்து பொதுப்பாதையில் அவர்களது வாகனங்களை நிறுத்தினர் என்பதும், அதனால் மனுதாரர்களும், பொதுமக்களும் மேற்படி பொதுப்பாதை வழியாக அவர்களது வீட்டிற்கு

செல்ல இயலவில்லை என்பதும், மேலும் மேட்டூர் வட்டம், நவப்பட்டி கிராமம், காவேரி கிராஸ், அண்ணாநகரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பழுதடைந்த நீர்தொட்டியை அகற்ற கடந்த 05.01.2025ம் தேதியில் JCB இயந்திரத்தின் மூலம் அகற்றும் பணியை 1, 2 எதிர்மனுதாரர்கள் தடுத்தனர் என்பதும் பொய்யானது என்றும், நீர்தொட்டி எதுவும் பழுதடையவில்லை என்றும், மேற்படி நீர்தொட்டியை 1ம் மனுதாரரின் வீடு அமைந்துள்ள தெருவில் வைக்க முற்பட்டனர் என்றும், மேலும் மனுதாரர்கள் வேண்டுமென்றே பல்வேறு பிரச்சனைகள் செய்துவருகின்றனர் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள்/வாதிகள் அ.வ.எண்.20/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் அசல் வழக்கும், அதனுடன் இணைந்த இடைநிலை மனுக்களும் பதிலுரைக்காக எதிர்வரும் 27.01.2025ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், தற்போது 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவா "B" அட்டவணை சொத்திலுள்ள பஞ்சாயத்து பொதுப்பாதையில் தங்களது வாகனங்களை நிறுத்தியும், தாவா சொத்தின் அருகிலுள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள பழுதடைந்த நீர்தொட்டியை அகற்றுவதை தடுத்தும், மனுதாரருக்கு பலவகையில் இடையூறு செய்து வருவதாகவும், அதனால் எதிர்வரும் 27.01.2025ம் தேதியிடப்பட்டுள்ள மேற்படி இ.ம.எண்.05/2024 என்ற மனுவை முன்னொரு தேதிக்கு முன்கொணர்வு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்டுரைகள் மறுத்துள்ள போதிலும், மேற்படி இ.ம.எண்.05/2024 என்ற மனுவை 27.01.2025ம் தேதியிலிருந்து முன்கொணர்வு செய்வதால் தங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எவ்வித சங்கதிகளையும் தெரிவிக்கவில்லை என தெரியவருகிறது. மேலும் மேற்படி இ.ம.எண்.05/2024 என்ற மனு முன்கொணர்வு

செய்யப்பட்டாலும் கூட, 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு தங்கள் தரப்பை எடுத்துரைக்க போதிய அவகாசம் வழுங்கப்படும் என்பதை கருத்தில் கொள்கையிலும், எதிர்மனுதாரர்களின் எதிர்வாதத்திற்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கும், அதிலுள்ள இடைநிலை மனுக்களும் 27.01.2025ம் தேதியில் வாய்தா நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தேதியிலோ அல்லது குறுகிய கால கட்டத்திற்குள் ஏதேனும் முந்தைய தேதிகளில் இ.ம.எண்.05/2024 என்ற மனுவை முன்னெடுப்பு செய்து வாய்தா நிர்ணயிக்கப்படுவதால் எதிர்தரப்பினர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட போவதில்லை என்பதால், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில், இ.ம.எண்.05/2024 என்ற மனுவானது எதிர்வரும் 27.01.2025ம் தேதியிலிருந்து 22.01.2025ம் தேதிக்கு முன் கொணர்வு செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு முன்னெடுப்பு நாள்.22.01.2025 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. தரப்பினர்கள் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.21 16:22:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.21 16:22:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.